
# மனித நேய மாண்பாளர் பேரறிஞர் அண்ணா!



தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால் இமை திறவாமல் இருந்த நிலையில் தமிழகம், தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவம் கிடைக்கையில் காஞ்சியில் அறிஞர் அண்ணா தோன்றினார்.

ஆம். திருவள்ளுவராண்டு 1940 ஆவணி திங்கள் 30 ஆம் நாள் (1909 ஆம் ஆண்டு செப்டம்பர் 15இல்) காஞ்சியில் திரு. நடராசன் திருமதி பங்காரு அம்மையாருக்கும் அண்ணா பிறந்தார்.

தொத்தா தொத்தா என்று அண்ணாவால் அன்பொழுக அழைக்கப்பட்ட சிற்றன்னை இராஜா மணி அம்மையாரால் அண்ணா வளர்க்கப்பட்டார்.

அண்ணாதுரை என்று பெயர் சூட்டினார்கள். பிற்காலத்தில், முதல் மூன்று எழுத்துகளை இணைத்து " அண்ணா " என்று தமிழர்கள் அனைவரும் பாசத்தோடு அழைப்பார்கள் என்று யாரும் நினைத்துக்கூட இருக்கமாட்டார்கள்.

அறிஞர் அண்ணா கல்லூரியில் படிக்கையில், ஒய்.எம்.ஸி.ஏ. பேச்சு அரங்கல், அறிவுத் துறையில் பங்கேற்று, அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன.

கல்லூரியில் பயின்ற காலத்தில் நீதிக் கட்சியின் கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த அண்ணா அவர்கள்,

நீதிக் கட்சியின் தொழிலாளர் தலைவர் திரு.சி. வாசுதேவ் அவர்கள் கூட்டங்களில் பேசுகின்ற ஆங்கில உரையினை மொழியாக்கம் செய்து அழகிய இனிய தமிழ் நடையில் பேசும் ஆற்றலைக் கண்டு நீதிக் கட்சி தலைவர்கள் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தனர்.

1935 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் பெத்துநாயக்கன்பேட்டை 35 ஆவது வட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் நீதிக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டார்கள்.

பெத்துநாயக்கன் பேட்டைத் தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் திரு. டி. செங்கல்வராயன் அவர்களை ஆதரித்து "தமிழ்த் தென்றல் " திரு.வி.க அவர்கள் பேசினார்கள்.

மறுநாள் அதே இடத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசிய உரையினைக் கேட்டு அறிந்து, பேச்சாற்றலை வாதத் திறமையைக் கேட்டு, வியந்து மகிழ்ந்து,

" அண்ணாதுரை
என்னும் அண்ணல்
தமிழ்நாட்டு வண்ணான்
அழுக்கெடுப்பில்
வாய்மொழியில்
பண்ணாவான்
சிற்பன் எழுத்தோவியத்தில்
செவ்வரசு நாவாயின்
அற்புதம் சூழ்
மாலுமி என்றாடு "
...என்று மகிழ்ச்சிப்
பள்ளு பாடி மகிழுந்தார்
தமிழ்த் தென்றல் திரு.வி.க

1936 ஆம் ஆண்டு கோவை திருப்பூரில் நடைபெற்ற செங்குந்தர் இளைஞர் மாநாட்டில், தந்தை பெரியார் அவர்களை முதன்முதலாக சந்தித்த அண்ணா, தன் பொதுவாழ்வில் ஏற்றுக் கொண்ட ஒரே தலைவர் தந்தை பெரியார் மட்டுமே என்று அறிவித்தார்கள்.

1949இல் அண்ணாவின் திரைக் கதை வசனத்தில் வெளிவந்த " நல்ல தம்பி, வேலைக்காரி " திரைப் படங்கள், தமிழ்த் திரை உலக வரலாற்றில் சமூகப் புரட்சியை உருவாக்கியது.

வேலைக்காரியில் அண்ணா எழுதினார்..
காதில் குண்டலம் ஆட
கணத்த சரீரம் பாட
காய்ச்சிய பால்
தொண்டையில் ஓட
கண்கள் கதியற்று
கன்னியரை நாட "
...என்று..

அந்தக் காலத்து போலிச் சாமியார்கள் குறித்து அண்ணாவைத் தவிர வேறு யாரால்தான் எழுத முடியும் ?

1962இல் அறிஞர் அண்ணா
அவர்கள், நாடாளுமன்ற
மேலவையில் (கன்னி பேச்சு)
உரையாற்றுகையில்...
I AM FROM MADRAS,
SORRY PREVENTED BY
NAME " TAMIL NADU.
MY COUNTRY IS
ECONOMICALLY ILL ;
EDUCATIONALLY DULL ;
INDUSTRIALLY NILL ,;
BUT CULTURALLY WELL ;
என்று அறிஞர் அண்ணா முழங்கினார்கள்.

நாடாளுமன்ற மேலவையில் (வடநாட்டு) உறுப்பினர் அறிஞர் அண்ணாவைப் பார்த்து.. madras State (சென்னைமாகாணம்) என்பதை தமிழ் நாடு என்று மாற்றுவதன் மூலம் நீங்கள் அடையப் போவது என்ன?

அண்ணா..
நான்
கேட்கிறேன்;
"பார்லிமெண்ட் "என்பதை
" லோக் சபா " என்று
மாற்றியதன் மூலம்
நீங்கள் எதை அடைந்தீர்கள் ?
" கவுசில் ஆப் ஸ்டேட் " என்பதை
" ராஜ்ய சபா " என்று
மாற்றியதன்மூலம்
நீங்கள் எதை அடைந்தீர்கள் ?
"பிரசிடென்ட் "என்பதை
" ராஷ்டிரபதி " என்று மாற்றியதன் மூலம்
நீங்கள் எதை
அடைந்தீர்களோ ?
அதை..
" தமிழ் நாடு "
பெயர் மாற்றுவதன் மூலம், நாங்களும் அடைந்து
கொள்கிறோம்
என்று அறிஞர் அண்ணா
பேசியது கேட்டு
வாயடைத்துப் போயினர்.
"தமிழாய்ந்த தமிழ்மகன்
தான்
தமிழ்நாட்டின்
முதலமைச்சாய்
வருதல் வேண்டும் "
...என்ற புரட்சிக்கவிஞரின்
இலட்சியம் ஈடேறும் வகையில்

அறிஞர்அண்ணா அவர்கள் 6.03.1976 அன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பினை ஏற்று, 1967 சூலை 18 ஆம் நாள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மகாணத்திற்கு (நம் நாட்டிற்கு) " தமிழ் நாடு " என்ற பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டு வந்து ஒரு மனதாக நிறைவேற்றியதுடன், முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் " தமிழ்நாடு" என்று முழக்கம் எழுப்பிட அனைத்துச் சட்டப் பேரவை உறுப்பினர்களும் வாழ்க ! வாழ்க ! வாழ்க ! என்று மூன்று முறை குரல் எழுப்பியதன் மூலம் சட்டப் பேரவை புதிய வரலாறு படைத்தது.

தந்தை பெரியாரால் கடந்த காலத்தில் நடத்தி வைக்கப்பட்ட நடைபெறுகிற " சுய மரியாதை திருமணங்கள் "அனைத்தும் செல்லுபடியாகும் என்ற சட்ட முன்வடிவினை முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் 28.11.1967 அன்று தமிழ் நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றினார்கள்.

தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இனி இந்திக்கு இடமில்லை என்னும் வகையில் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள், 1968 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் நாள் (தமிழ் ஆங்கிலம்) இரு மொழி திட்டம் சட்ட முன் வடிவு கொண்டு வந்து நிறவேற்றினார்.

" மனித நேய மிக்க
மகத்தான தலைவர்
அண்ணா "

முதல்வர் அண்ணா அவர்கள் அமெரிக்கா செல்லும் வழியில், வாடிகன் நகரில் இறங்கி, உலகு போற்றும் கிருத்துவ மதத் தலைவர் பால் போப்பாணடவர் அவர்களை அண்ணா சந்தித்து, அறிவுப் பேராசான் அய்யன் திருவள்ளுவரின் திருக்குறளை பரிசாக வழங்கியவுடன், . போப்பாண்டவர் அவர்கள், தங்களின் (கோரிக்கை) விருப்பம் என்ன என்று கேட்க, அதற்கு அண்ணா அவர்கள்...

கோவா சிறையில் அடைக்கப்பட்டு பல ஆண்டுகளாக வாடிக்கொண்டு இருக்கிற விடுதலை வீரர் எம்.ஜி. ரானடே அவர்களை விடுதலை செய்திட போர்த்துக்கீசிய அரசிற்கு தாங்கள் பரிந்துரை செய்யவேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார்கள்.

அண்ணாவின் வேண்டுகோள் ஏற்று, போர்த்துக்கீசிய அரசிடம் தொடர்பு கொண்டு பரிந்துரை செய்ததின் பயனாக கோவா விடுதலை வீரர் எம்.ஜி. ரானடே விடுதலை செய்யப்பட்டார். எம்.ஜி.ரானடே அவர்கள், தன் விடுதலைக்கு காரணமான அறிஞர் அண்ணா அவர்களை சந்தித்து நன்றி சொல்ல வந்தபோது அண்ணா அவர்கள் இல்லை. அண்ணாவின் நினைவிடம் சென்று நன்றியுடன் அஞ்சலி செலுத்தி திரும்பினார்.

அண்ணாவின் மனித நேரத்தை பறை சாற்றும் காலத்தால் அழியாத நிகழ்ச்சியாகும்.

பேரறிஞர் அண்ணாவிற்கு ஏல் பல்கலைக் கழகம் சிறப்புப் பட்டம்.

உலகப் புகழ் பெற்ற அமெரிக்க ஏல் பல்கலைக் கழ கத்திற்கு, இந்திய மேனாள் தலைமை அமைச்சர்கள் நேரு, அன்னை இந்திரா காந்தி, மற்ற வெளிநாட்டுத்தலைவர்கள்

சென்றிருந்தாலும்
அமெரிக்கரல்லாத வெளிநாட்டுத் தலைவரை
சிறப்பு விருந்தினராக
அழைத்து
ஏல் பல்கலைக்ஸகழகம்
முதல் முறையாக
" CHUBB FELLOW SHIP "

...என்ற பட்டம் (15.04.1968) வழங்கி பெருமைப் படுத்தியது அறிஞர் அண்ணா அவர்களுக்குத் தான்.

அண்ணா அவர்களை சிறப்பு விருந்தினராக அழைத்து ஒரு வாரம் தங்க வைத்து, உலகில் பல்வேறு நாடுகளிலிருந்து இங்கு வந்து பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மத்தியில் கேள்வி பதில் விளக்க உரைகள் சொற்பொழிவுகள் எல்லாம் உண்டு அத்தனையும் கற்கண்டு.

" தேமதுரத் தமிழோசை
உலகமெலாம்
பரவும் வகை செய்தல்
வேண்டும் "
... என்ற பாரதியின்

கனவை நனவாக்கும் வகையில் நம் உயிரினும் இனிய உயர் தனிச் செம்மொழியான தமிழின் சிறப்பினை, உலகின் ஒப்புயர்வற்ற பேர் இலக்கியத்தை உருவாக்கிய உலகு தொழும் அறிவுப் பேராசான் அய்யன் திருவள்ளுவரின் திருக்குறளை அதன் பொருளினை ஆங்கிலத்தில் அழகுற எடுத்துச் சொல்லி தமிழுக்குப் பெருமை சேர்த்தார் அண்ணா.

பன்னாட்டு மாணவர் மத்தியில் அறிஞர் அண்ணா. கேள்வி பதில்...
ஒரு மாணவன்:
ஒரு வாக்கியத்தில்
BECAUSE என்றுமூன்று
முறை வரவேண்டும்,
சொல்லுங்கள் பார்க்கலாம்..
அடுத்த வினாடி
அறிஞர் அண்ணா...
NO SENTENCE CAN END
IN BECAUSE, BECAUSE
BECAUSE IS A
CONJECTION.
( ஒரு சொற்றொடர் முடிவில்
" ஏனென்றால் ""என்று வராது, ஏனென்றால்,
ஏனென்றால் என்பது
ஒரு இணைப்புச் சொல்லாகும்)
என்று கூறியவுடன்

மாணவர்கள் வியந்து பாராட்டி மகிழ்தனர். அறிஞர் அண்ணா அறிவின் ஆழத்தை கூர்மையைக் கேள்வியுற் றதோடு, நேரிலும் கண்டு வியந்து ஏல் பல்கலைக் கழகம் " செஃ பெல்லோ ஷிப் " (CHUBB FELLOW SHIP) என்ற பட்டத்தினை வழங்கி சிறப்பித்தது.

" ஆங்கிலச் சொல்மழையோ ! அண்ணாவின் ஆற்றலுக்கு ஆலவட்டம் " என்பதற்கு சான்றென பேரறிஞர் அண்ணா குறித்து புகழ் பெற்ற "இல்லஸ்டிரேட்டட் வீக்லி" என்ற ஆங்கில ஏடு புகழாரம்...

தூத்துக்குடியிலிருந்து டிம்பக்ட்டு வரை, டிம்பக்ட்டுவிலிருந்து டாஸ்மோனியா வரைண தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் அவர்களது இதய சிம்மாசனத்தில் அரியணை அமைத்துக்கொண்டு பேரரசராய் ஆட்சி செலுத்துகின்றவர் அண்ணா என்று புகழுரை வழங்கி பெருமை கொண்டது.

அத்தகைய சிறப்பு வாய்ந்த அண்ணாவின் பிறந்நாளில் அண்ணா வழியில்
அயராது உழைப்போம்;
ஆதிக்கமற்ற சமுதாயம்
அமைத்தே தீருவோம் ;
இந்தி திணிப்பை
என்றும் எதிர்ப்போம்;
வன்முறை தவிர்த்து
வறுமையை வெல்வோம்;
மாநிலத்தில் சுயாட்சி;
மத்தியில் கூட்டாட்சி !
தமிழினத் தலைவர்
கலைஞரின் ஐம்பெரும்
முழக்கம் வெற்றிபெற..
திராவிட மாடல் ஆட்சித்
தலைவர் தளபதியார்
. . அவர்கள் தலைமையில்
. ஒன்று படுவோம் !
சனாதனத்தை
வேரறுப்போம் !
சமதர்மத்தை
நிலை நாட்டுவோம் !

அண்ணாவின் புகழ் வாழ்க !

**க.வை. இராமகிருட்டினன்**
செயலர்
அய்யன் திருவள்ளுவர்
இலக்கிய மன்றம்
மதுரை

## பீகாரில் படகு கவிழ்ந்து விபத்து!


பாட்னா, செப். 15 -

பீகார் மாநிலம் முசாபர்புர் மாவட்டத்தில் பாக்மதி நதி ஓடிக் கொண்டிருக்கிறது. மதுபுர் பாத்தி காட் இடையே, 30 குழந்தைகளை படகு ஒன்று பள்ளிக்கு ஏற்றிச் சென்று கொண்டிருந்தது. இந்த படகு திடீரென கவிழ்ந்தது. இதனால் குழந்தைகள் தண்ணீர் தத்தளித்தனர். உடனடியாக மீட்புப்பணி நடைபெற்றது. இதன் பயனாக 20 குழந்தைகள் மீட்கப் பட்டனர்.

ஆனால், 10 குழந்தைகளை காணவில்லை. அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்தத் தகவல் அறிந்த தும் பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார் "மீட்புப் பணி நடைபெற்று வருகிறது. இவ்விவகாரத்தை அவசரமாக கவனிக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் கேட்டுக் கொண்டேன்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அனைத்து விதமான உதவிகளையும் அரசு செய்யும்" எனத் தெரிவித்துள்ளார்.

## முற்போக்கு அறநெறியாளர் முகமது நபி !



உருவ வழிபாட்டையும் பலதெய்வ வணக்கத்தையும் ஒழித்துக் கட்டும் தமது குறிக்கோளுக்காக உயிரையே பணயம் வைத்துப் போராடினார் ஒரு புரட்சி ஞானி !

எழுதப் படிக்கத் தெரிந்த கல்வி அறிவே இல்லாதவராக இருந்தும், மூட நம்பிக்கைகளை முறியடிக்கும் மூளை வலிமை மிகுந்தவராக அறநெறிகளை முழுங்கினார் அந்தச் சொந்தச் சிந்தனையாளர்.

வணிகத் தொழிலின் நுணுக்கங்களை நன்றாக அறிந்து, வளமான வாழ்க்கை நடத்தும் வாய்ப்புகள் வந்த போதும், சொத்துப் பற்றையே துறந்து, பசியிலும் நோயிலும் துடிப்பவர்க்குப் பரிவுகாட்டி உதவச் சொன்ன அறநெறிகளின் அரிய பேரொளி முகமது நபி !

**- பேரறிஞர் அண்ணா**

பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றியது திராவிட மாடல் அரசு!

## கரு சுமக்கும் பெண்களும் இனிக் கருவறைக்குள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, செப் 15-

பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றியது திராவிட மாடல் அரசு. கரு சுமக்கும் பெண்களும் இனிக் கருவறைக்குள் செல்லும் நிலையை உருவாக்கியுள்ளது திராவிட மாடல் அரசு என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்தோடு குறிப்பிட்டுள்ளார்.

"அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்" திட்டத்தின் கீழ் மூன்று பெண்கள் அர்ச்சகர் பயிற்சி முடித்த தையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**பெண்கள் விமானத்தை இயக்கினாலும், விண்வெளிக்கே சென்று வந்தாலும் அவர்கள் நுழைய முடியாத இடங்களாகக் கோயில் கருவறைகள் இருந்தன. பெண் கடவுளர்களுக்கான கோயில்களிலும் இதுவே நிலையாக இருந்தது.**

**ஆனால், அந்நிலை இனி இல்லை! அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் எனப் பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை நமது திராவிட மாடல் ஆட்சி அகற்றியதில், கரு சுமக்கும் பெண்களும் இனிக் கருவறைக்குள்...**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஒரே நாடு ஒரே தேர்தல், சுய லாபத்திற்காக

## மாநிலங்களை முழு கட்டுப்பாட்டில் வைக்க முயல்கிறார் மோடி!

### 'தினகரன்' தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, செப். 15-

ஒரே நாடு ஒரே தேர்தல் என கூறிக்கொண்டு தனது சுய லாபத்திற்காகவும் மாநிலங்களை முழு கட்டுப்பாட்டில் வைக்க முயலும் முயற்சி என மோடியை 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

அது வருமாறு:-

'ஒரே நாடு ஒரே தேர்தல்' விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடி 2018லிருந்து தொடர்ந்து பேசி வருகிறார். பா.ஜ. ஆட்சி செய்யும் மாநிலங்களை தவிர, மற்ற மாநிலங்களில் இந்த முடிவுக்கு எதிர்ப்புகளே கிளம்பியுள்ளன.

ஒரே நேரத்தில் தேர்தலை நடத்தும்போது செலவினங்கள் குறையும். ஒன்றிய அரசின் திட்டங்கள் தங்குதடையின்றி மாநிலங்களை சென்றடையும். தேர்தல் பாதுகாப்பு அம்சங்களுக்கும் பிரச்சினை ஏற்படாது என கூறுகிறது பா.ஜ. அரசு. ஆனால், ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவது அவ்வளவு எளிதான விஷயமல்ல. அதற்கு, ஏற்கனவே நடைமுறையில் உள்ள பல அரசியல் சட்டங்களை திருத்த வேண்டும்.

அதாவது, நாடாளு மன்றம், சட்டமன்றத்தை கலைத்தல், மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்துதல் உள்ளிட்ட சட்டங்களில் திருத்தம் கொண்டு வர வேண்டும். இதற்கு மாநில கட்சிகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

கடந்த 2019ல் ஆட்சிக்கு வந்த பா.ஜ. அரசின் ஆட்சிக்காலம் அடுத்தாண்டு முடிவடைய உள்ளது. இதனையொட்டி, 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கான பணிகள் தொடங்கி நடந்து வருகின்றன. நடப்பாண்டின் இறுதியில் ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், தெலங்கானா, சட்டீஸ்கர், மிசோரம் மாநிலங்களில் சட்டசபை தேர்தல்கள் நடைபெற உள்ளன.



தினகரன்
செப்டம்பர் 14, 2023 வியாழக்கிழமை
மாநில உரிமை பறிபோகும்
'ஒரே நாடு ஒரே தேர்தல்' விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடி 2018லிருந்து தொடர்ந்து பேசி வருகிறார். பாஜ ஆட்சி செய்யும் மாநிலங்களை தவிர, மற்ற மாநிலங்களில் இந்த முடிவுக்கு எதிர்ப்புகளே கிளம்பியுள்ளன.
ஒரே நேரத்தில் தேர்தலை நடத்தும்போது செலவினங்கள் குறையும். ஒன்றிய அரசின் திட்டங்கள் தங்குதடையின்றி மாநிலங்களை சென்றடையும். தேர்தல் பாதுகாப்பு அம்சங்களுக்கும் பிரச்சினை ஏற்படாது என கூறுகிறது பாஜ அரசு. ஆனால், ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவது அவ்வளவு எளிதான விஷயமல்ல. அதற்கு, ஏற்கனவே நடைமுறையில் உள்ள பல அரசியல் சட்டங்களை திருத்த வேண்டும். அதாவது, நாடாளுமன்றம், சட்டமன்றத்தை கலைத்தல், மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்துதல் உள்ளிட்ட சட்டங்களில் திருத்தம் கொண்டு வர வேண்டும். இதற்கு மாநில கட்சிகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

கடந்தாண்டு உத்தரப்பிரதேசம், குஜராத், பஞ்சாப் உட்பட 5 மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல்கள் முடிவடைந்துள்ளன. மேலும், ஒடிசா, ஆந்திரா, அருணாச்சல பிரதேசம், சிக்கிம் ஆகிய மாநிலங்களிலும், தொடர்ந்து அரியானா, மகாராஷ்டிரா மாநிலங்களிலும் சட்டமன்ற தேர்தல்கள் நடைபெற உள்ளன. கடந்த மே மாதம்தான் கர்நாடகா மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தல் முடிவடைந்து, காங்கிரஸ் கட்சி ஆட்சி பொறுப்பை ஏற்றுள்ளது. மேலும், பல மாநிலங்களில் ஆட்சிகள் முடிய 2, 3 ஆண்டுகள் மீதமுள்ளன. தேர்தல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறுவிதமானவை. ஒரு வாக்காளருக்கு தேசிய பார்வை ஒன்று இருக்கும். மாநில பார்வை ஒன்று இருக்கும்.

இதில், ஒன்றை தவறாக செய்தாலும் வாக்காளர்களுக்கு தேவையற்ற குழப்பங்களே ஏற்படும். தேர்தல் பிரசார வியூகம் அமைப்பதில் கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்படும். மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்படும். அதிபர் முறையை கொண்டு வருவதற்கான முயற்சியே ஒன்றிய அரசின் ஒரே நாடு ஒரே தேர்தல் கோஷமென கூறி, தி.மு.க. தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் உட்பட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், இதற்கு கடுமையான எதிர்ப்புகளை தெரிவித்துள்ளனர். ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் போது, சுமார் ரூ.10 லட்சம் கோடி வரை செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலங்களிலும் பதற்றமான தொகுதிகள், வாக்குச்சாவடிகள் உள்ளன.

இதனை மனதில் கொண்டு கூடுதல் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். மாநில போலீசார், மத்திய பாதுகாப்பு படையினரை கொண்டு, ஒட்டுமொத்த தேர்தல்களுக்கும் பாதுகாப்பு அளிப்பது, இந்தியா போன்ற நாடுகளில் அவ்வளவு எளிதான விஷயமல்ல. இதனால் தேர்தல் நியாயமான, பாதுகாப்பான முறையில், நம்பகத்தன்மையோடு நடக்கும் என உறுதியாக கூறி விட முடியாது. மாநிலங்களை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் முயற்சிதான், ஒரே நாடு ஒரே தேர்தல் என்கின்றனர் எதிர்க்கட்சியினர். வரும் 18ம் தேதி முதல் 22ம் தேதி வரை, ஒன்றிய அரசு சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தொடரை கூட்டியுள்ளது. இந்த கூட்டத்தொடரில், இந்த மசோதாவை நிறைவேற்றும் முயற்சியில் ஒன்றிய அரசு ஈடுபட்டால், அதனை வலுவாக எதிர்க்கவும் எதிர்க்கட்சிகள் தயாராக உள்ளன.

இவ்வாறு 'தினகரன்' தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.


தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
**திருச்சிராப்பள்ளி கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்,**
கலைஞர் 100 1924 - 2023

**ஒப்பந்தப்புள்ளி அழைப்பு**
ஒ.அ.எண்: 42/2023-24/தவஅ/ நாள்:08.09.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால் 2023-24ம் ஆண்டிற்கான திட்டம் சாரா பணிகளில், **தஞ்சாவூர்** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **4 பணிகளுக்கு** இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **04.10.2023, 14.00** மணி வரை (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விபரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்கள் **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **18.09.2023** முதல் தெரிந்துக்கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையத்தளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப வட்டம், திருச்சிராப்பள்ளி -20.**

செ.ம.தொ.இ./5022/ஒப்பந்தப்புள்ளி/2023




கழக மீனவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தலைமையில் அ.ஜோசப் ஸ்டாலின், இரா.பெர்னார்டு, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., இரா.மதிவாணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் துணைச் செயலாளர்கள், மீனவர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.